## முக்கிய முகவரிகளும் தகவல் நிலையங்களும்

- சிறார்கள் வைத்தியர்கள்
- Gesundheitsdienst der Stadt Bern
- Logopädinnen und Logopäden
  www.logopaedie-bern.ch
- Inselspital Bern, Stimm- und Sprachabteilung
- Erziehungsberatungsstelle des Kantons Bern
- Mütter- und Väterberatung Kanton Bern
  www.mvb-be.ch
- Tageselternverein ihrer Gemeinde
- Jugendamt der Stadt Bern
- ISA, Informationsstelle für Ausländerfragen, Bern (Deutschkurse)
- Schulamt der Stadt Bern (Mutter-Kinder-Deutschkurse)
  Telefon: 031 321 64 46

Gesundheitsdienst der Stadt Bern GSD

primano
Eine Initiative der Stadt Bern zur
Förderung von Kindern im Vorschulalter

Logopädie Bern

tamilisch 11/2012 / Illustrationen: Hugo Bossard, Biberist ©

# தாய்மொழி = இதயமொழி



எந்த மொழியில் நான் என் பிள்ளையுடன் கதைக்கலாம்?

# தாய்மொழி = இதயமொழி



- பல்மொழித்தகமை = வெற்றிக்குவழி
  இரண்டாவது மொழியின் வெற்றி முதலாவது மொழியின் தரத்தில் தங்கியுள்ளது.



- உங்களுக்கு நம்பிக்கையான மனதுக்குச் சந்தோசமான மொழியில் பிள்ளையுடன் கதையுங்கள்.



- பெற்றோராகிய நீங்கள் பல மொழிகளில் கதைப்பதாயிருந்தால், தாய் தகப்பன் தங்கள் தங்கள் தாய்மொழியில் பிள்ளையுடன் கதைத்தல் சிறந்தது.

- **சிறு கதைகள், ஆறுதலளிக்கும் செய்யுள்கள், தாலாட்டுப் பாடல்கள் ஊடாக உங்கள் மொழியைக் கலாச்சாரத்தை அறிவியுங்கள்.**



அத்துடன்:
பெற்றோராகிய நீங்கள் டொச் மொழியில் ஆர்வம் செலுத்தி டொச் மொழி பேசும் பிள்ளைகளுடன் தொடர்புகளை உருவாக்குங்கள்.



# மொழி வளர்ச்சி

**1. வருடத்தில்**
தன் பெயரைக் கேட்டால் திரும்பிப்பார்க்கும்.
கேட்கும் சத்தங்களை வாயால் (லல்லல் போன்றன) உச்சரிக்கும்.

**2. வருடத்தில்**
சாதாரண வழமையான உத்தரவுகளை விளங்கிக் கொள்ளும்.
அத்துடன் குறைந்தது 50 சொற்களைக் கதைக்கும்.

**3. வருடத்தில்**
என்ன, யார், எப்படி? என்ற கேள்விகளைக் கேட்கும்.
பெரும்பாலான உச்சரிப்புகளைச் சரியாக மீள உற்பத்தி செய்வார்கள்.

**4. வருடத்தில்**
சிறிய வசனங்களை உருவாக்குவதுடன் ஏன் என்றும வினாவுவார்கள்.
சிறிய கதைகளை விளங்கிக் கொள்வதுடன் பாடல்கள் செய்யுள்களை ஞாபகத்தில் வைத்திருப்பார்கள்.

**5/6 வருடத்தில் (பாலர்வகுப்பு)**
வேற்றாரும் விளங்கும் வகையில் கதைப்பார்கள்.
உளஉணர்வுகள் தமது தேவைகள் தொடர்பாகக் கதைப்பார்கள்.

- இந்த வளர்ச்சிகளை உங்கள் பிள்ளை அடையாவிட்டால்.........
- நீங்கள் பிள்ளையின் மொழி தொடர்பாகக் கவலையடைந்தால்.......
- பிள்ளை நீண்ட காலத்திற்கு கொன்னை அல்லது கரகரத்தல் குரலைக் கொண்டிருந்தால்........

தகுதி வாய்ந்தவர்களிடம் ஆலோசனை பெறுங்கள்!